# ‘‘மேன்மை மிகு இறை இசை’’

**முன்னுரை :**

‘‘இசை’’ பெயரிலேயே பொருளையும் தாங்கியுள்ளது. ஆம், ‘‘இசை’’ என்றால் அனைத்து உயிரினங்களையும் ‘‘இசைய வைப்பது’’ என்பது பொருள். ஆங்கிலத்தில் இசையை ‘‘MUSIC’’ என்று அழைப்பார்கள். MUSES என்ற தேவதைகள் விரும்பி ஊக்குவித்த கலையை ‘‘கிரேக்கர்கள்’’ Music என்று அழைத்தனர். எனவே Music என்ற சொல் நேரடி ஆங்கிலச்சொல் அல்ல என்பது புலனாகிறது.

எல்லாம் வல்ல இறைவனைப் போற்றித் தொழுவதற்கு ஆயிரம் வழிமுறைகள் இருந்தாலும் ‘‘இசையால்’’ இறைவனை போற்றித்தொழுவதே உயர்வானதாகவும் உன்னதமானதாகவும் முதன்மையானதாகவும் அனைத்து மதங்களிலும் போற்றப்படுகிறது.

மேலும் ‘‘இயல் இசை நாடகம்’’ என்ற முத்தமிழ் நடுநாயமாக விளங்கி தனிச்சிறப்புடன் திகழ்கிறது.

இனி நமது ‘‘கர்னாடக சங்கீதம்’’ என போற்றப்படும் இந்திய ‘‘செவ்விசையின்’’ தனித்தன்மைகளை சற்று விரிவாகப் பார்ப்போம்.

**நாதம் :**

நாதம் என்ற சொல்லுக்கு ‘‘இனிமையான ஒழுங்கு செய்யப்பட்ட இசை ஒலி’’ என்பது பொருள். நாதமும் சப்தம்தான், இரைச்சலும் சப்தம் தான். இவ்விரு சப்தங்களில் கேட்பதற்கு இனிமையாயுள்ள சப்தம் ‘‘நாதம்’’ எனவும், இனிமையற்ற, ஒழுங்கற்ற சப்தம் ‘‘இரைச்சல்’’ எனவும் அறியப்படுகிறது.

**ஸ்வரங்கள் :**

நாதம் என்ற இசை ஒலியிலிருந்து ''ஸ்வரங்கள்'' பிறக்கின்றன. இந்த ஸ்வரங்களை ''சப்த ஸ்வரங்கள்'' என கூறுவது மரபு. ''சப்த'' என்ற வடமொழிச் சொல்லுக்கு ''ஏழு'' (7) என்பது பொருள். அதாவது,

''ஸரிகமபதநி'' என்ற ஏழு இசைஒலி நிலைகளை ''சப்த ஸ்வரங்கள்'' என்கிறோம்.

**ஸ்ருதியும் தாளமும்**

''ஸ்ருதி மாதா லயம் பிதா'' என்றொரு பழமொழி உண்டு. அதாவது இசை என்ற குழந்தைக்கு தாயாக ஸ்ருதியும் தந்தையாக லயமும் (தாளம்) விளங்குகிறது.

ஒரு குரலிசையாளன் தனது குரலுக்கேற்ற ஒலி நிலையை தேர்வு செய்ய வேண்டும். தேர்வு செய்யப்பட்ட ஒலிநிலையை இசை நிகழ்ச்சி நிறைவடையும் வரை மாற்றக்கூடாது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட ஒலிநிலையை ''ஸ்ருதி'' என்று கூறலாம்.

லயம் என்பது ஒலி நிலைகளின் கால அளவைக் குறிப்பதாகும். லயம் என்ற கால அளவிலிருந்து ''தாளம்'' என்பது தோன்றியது. தாளம் என்பது பாடப்படும் பாடலின் அளவை நிர்ணயம் செய்வதாகும். தாள வாத்தியக் கலைஞர்களுக்கு லய நிர்ணயம் என்பது மிகவும் இன்றியமையாததாகும்.

**தாள வகைகள்**

மொத்தம் ஏழுவகையான தாளங்கள் உள்ளன. இவை ''சப்த தாளங்கள்'' என்று அழைக்கப்படுகின்றன.

அவை 1) துருவ தாளம், 2) மட்டிய தாளம், 3) திரிபுடை தாளம், 4) ரூபக தாளம், 5) அடதாளம், 6) ஜம்பை தாளம், 7) ஏகதாளம் என்பனவாகும்.

தாள ஜாதிகள் ஐந்து (5) வகைப்படும்

அவை 1) திஸ்ரம் 2) சதுஸ்ரம் 3) கண்டம் 4) மிஸ்ரம் 5) சங்கீர்ணம்

ஏழு (7) வகைத்தாளங்களும் ஐந்து (5) வகை ஜாதிகளால் பெருக்கப்படும் போது (7 x 5 = 35) மொத்தம் 35 வகையான தாளங்கள் உருவாகின்றன. பழங்காலத்தில் 108 வகையான தாளங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. மேலும் சந்த தாளங்கள், சாபு தாளங்கள் என்ற தாள வகைகளும் கையாளப்பட்டு வருகின்றன.

**இராகம் :**

நாதம் என்ற இசை ஒலியிலிருந்து ஸ்வரங்கள் பிறக்கின்றன. ஸ்வரங்கள் (7) வகைப்படும் என ஏற்கனவே பார்த்தோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| அவை | 1 | ஸட்ஜம் | - | ஸ |
| | 2 | ரிஷபம் | - | ரி |
| | 3 | காந்தாரம் | - | க |
| | 4 | மத்யமம் | - | ம |
| | 5 | பஞ்சமம் | - | ப |
| | 6 | தைவதம் | - | த |
| | 7 | நிஷாதம் | - | நி |

என்பனவாகும்.

மேற்கண்ட ஸ்வரங்களின் ஒலி நிலையை ''ஸ்வரஸ்தானங்கள்'' என்கிறோம். ''ஸ, ப'' என்ற இரு ஸ்வரங்களும் நிலையான ஸ்தானத்தைக் கொண்டவை. மற்ற ஸ்வரங்களான ரி, க, ம, த, நி ஆகியவை தனித்தனியே இரண்டு ஸ்தானங்களைக் கொண்டுள்ளன.

அவை

| | | |
|---|---|---|
| ரி | 1.சுத்தரிஷபம் | ரி$_1$ |
| | 2.சதுஸ்ருதிரிஷபம் | ரி$_2$ |

| | | |
|---|---|---|
| க | 1. சாதாரண காந்தாரம் | $க_1$ |
| | 2. அந்தர காந்தாரம் | $க_2$ |
| ம | 1. சுத்த மத்யமம் | $ம_1$ |
| | 2. பிரதி மத்யமம் | $ம_2$ |
| த | 1. சுத்த தைவதம் | $த_1$ |
| | 2. சதுஸ்ருதி தைவதம் | $த_2$ |
| நி | 1. கைஷிகிநிஷாதம் | $நி_1$ |
| | 2. காகலிநிஷாதம் | $நி_2$ |

ஆக ஸ, ப வுடன் மேற்கூறிய 10 ஸ்வரங்களையும் சேர்த்தால் மொத்தம் 12 ஸ்வரஸ்தானங்கள் கிடைக்கின்றன.

மேற்கண்ட ஸ்வரஸ்தானங்கள் சேர்ந்து பல வகையான ராகங்களைத் தோற்றுவிக்கின்றன. குறிப்பிட்ட ஸ்வரஸ்தானங்களின் கோர்வைகளால் பின்னப்பட்ட அமைப்பே ராகம் எனப்படும். ராகத்திற்கு தமிழில் **"பண்"** என்னும் பெயர் கொண்டழைக்கப்படுகிறது. மேற்கூறிய 12 ஸ்வரஸ்தானங்களும் மாறி மாறி அமைந்து முழுமையான (சம்பூர்ண) இராகங்கள் கிடைக்கின்றன. இவை 72 வகைப்படும். இந்த 72 ராகங்களும் தாய் ராகங்கள், மேளராகங்கள், கர்த்தா ராகங்கள், ஜனராகங்கள் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

மேற்கண்ட 72 தாய் ராகங்களிலிருந்து லட்சக்கணக்கான புதிய ராகங்கள் பிறந்தன. இவைகளை சேய் ராகங்கள், ஜன்ய ராகங்கள், திறம் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அதாவது தாய் ராகத்திலுள்ள சில ஸ்வரங்களை நீக்குவதாலும், அல்லது தாய்ராகத்தில் இல்லாத வேறு ஸ்வரங்களை சேர்ப்பதாலும், "திறம்" எனப்படும் சேய் ராகங்கள் கிடைக்கின்றன.

(எ.கா) தாய்ராகம், சங்கராபரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸ | $ரி^2$ | $க^2$ | $ம^1$ | ப | $த^2$ | $நி^2$ | ஸ் |
| ஸ் | $நி_2$ | $த_2$ | ப | $ம_1$ | $க_2$ | $ரி_2$ | ஸ |

தாய்ராகமான சங்கரா பரணத்திலிருந்து ம, த ஆகிய ஸ்வரங்களை நீக்கும் பொழுது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ | ரி$^{2}$ | க$^{2}$ | ப | நி$^{2}$ | ஸ் |
| ஸ் | நி$^{2}$ | ப | க$^{2}$ | ரி$^{2}$ | ஸ |

என்ற ஸ்வரங்களைக் கொண்ட ''ஹம்ஸத்வனி'' என்ற சேய்ராகம் தோன்றுகிறது. இவ்வாறு ஒவ்வொரு தாய்ராகங்களிலிருந்து பலவகையான சேய் ராகங்கள் தோன்றுகின்றன.

நமது முன்னோர்கள் எந்தெந்த வேளையில் எந்தெந்த ராகங்களைப் பாட வேண்டும் என்பதை திறம்பட வகுத்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1. | விடியற்காலை 4 மணி முதல் 6 மணி வரை | பூபாளம், பௌளி, மலயமாருதம் வலஜி, கல்கட ஆகியவை |
| 2. | காலை 6 மணி முதல் 9 மணி வரை | பிலஹரி, கேதாரம், தன்யாஸி |
| 3. | முற்பகல் 9 மணி முதல் 12 மணி வரை | அசாவேரி, சாவேரி, தேவமனோகரி |
| 4. | நண்பகல் 12 மணி முதல் 1 மணி வரை | ஸ்ரீராகம், மணிரங்கு, மத்யமாவதி, புஷ்லபதிகா, ப்ருந்தாவன சாரங்கா |
| 5. | பிற்பகல் 1 மணி முதல் 4 மணி வரை | முகாரி, பேகடா |
| 6. | மாலை 4 மணி முதல் 7 மணி வரை | கல்யாணி, வஸந்தா, நாட்டக்குறிஞ்சி, பூர்வி கல்யாணி |
| 7. | இரவு 7 மணி முதல் 10 மணி வரை | கேதாரகௌளா, நீலாம்பரி |
| 8. | எல்லாக்காலங்களிலும் | காம்போஜி, பைரவி, ஆரபி |

பாடத்தகுந்தவை சங்கராபரணம் முதலியன

இதே போல் நவரசத்திற்கு ஏற்ற ராகங்களையும் நம் முன்னோர்கள் திறம்பட வகுத்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கருணாரசம் | - | ஸஹானா, கானடா, பைரவி |
| 2. | சிருங்காரரசம் | - | சுருட்டி, கமாஸ், உசேனி |
| 3. | ரௌத்ரரசம் | - | அடாணா, ஆரபி |
| 4. | வீரரசம் | - | பிலஹரி, தேவகாந்தாரி, நாட்டை |
| 5. | ஹாஸ்யரசம் | - | மோகனம், கேதாரம், வஸந்தா |
| 6. | அற்புதரசம் | - | சாரங்கா, பெஹா.ஃ.க் |
| 7. | பீபத்சரசம் | - | அடாணா |
| 8. | பயானகரசம் | - | புன்னாக வராளி |
| 9. | சாந்தரசம் | - | சாமா, வஸந்தா |

மேற்கண்ட பட்டியலில் சில ராகங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட ரசங்களை வெளிப்படுத்துவதை அறியலாம்.

இவ்வாறாக நம்முன்னோர்கள் ராகங்களையும் தாளங்களையும் அறிவுப்பூர்வமாக, திறம்பட வகுத்துள்ளனர்.

**நிறைவுரை :**

மனித வாழ்வில் ஒவ்வொரு கால கட்டத்திலும் இசை மிகவும் முக்கியத்துவமாக, இன்றியமையாததாக விளங்குகிறது. கல் நெஞ்சையும் கரைக்கும் சக்தி கொண்டது இசை, இறைவனே இசை வடிவானவன் என சங்க நூல்கள் எடுத்துரைக்கின்றன. ஆகவே இவ்வளவு சிறப்பு வாய்ந்த இசையை அனைவரும் முறையாகக்கற்று எல்லாம் வல்ல ஆண்டவர் பணியில் சிறப்போமாக.

வணக்கம்.

**S.சிவாயா இராமலிங்கம்**
கர்நாடக இசை ஆசிரியர் கோவை.